*மலைப்பிரசங்கம் 09*

## *நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்*

***மத்தேயு 5:3-12, ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது. 4. துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள். 5. சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள். 6. நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள். 7. இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள். 8. இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள். 9. சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள். 10. நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது. 11. என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; 12. சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே.***

### *மலைப்பிரசங்கத்தின் அமைப்பு*

*இதற்கு நாம் பதிலளிக்கவேண்டுமானால் மலைப்பிரசங்கத்தின் அமைப்பை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.*

*மொத்தம் எட்டு போதனைகளை மலைப்பிரசங்கம் உள்ளடக்கியுள்ளது.*

*1. ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்.*

*2. துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்.*

*3. சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.*

*4. நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.*

*5. இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.*

*6. இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.*

*7. சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்.*

*8. நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்.*

*இந்த முதல் நான்கு போதனைகளும் உடைக்கப்பட்ட, துக்கிக்கும், நீதியின் மேல் பசிதாகம் கொண்ட மென்மையான நபர்களைக் குறித்துப் போதிக்கிறது.*

*கடைசி நான்கு போதனைகளும் இரக்கமுள்ள, தங்கள் நீதியின் நிமித்தம் துன்பப்படுகிற மெய்யான சமாதானத்தை அறிவிக்கிறவர்களைக் குறித்து போதிக்கிறது.*

*அவர்கள் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்கள் வழிந்தோடுகிறது.*

*மலைப்பிரசங்க போதனைகள் ஒன்றன்பின் ஒன்றாய், புது சிருஷ்டியாய் மாற்றப்பட்டவர்களுக்கு நித்தியத்தின் ஆசீர்வாதம் கொடுக்கப்படுகிறது என்று போதிக்கிறது.*

*இந்த மலைப்பிரசங்க போதனைகள் வாக்குப்பண்ணும் உண்மையான, ஆழமான, மற்றும் நிலைத்திருக்கக்கூடிய மகிழ்ச்சியானது, தேவனுடைய இராஜ்யத்தின் பங்காளர்களாய் அழைக்கப்பட்ட ஆண்களுக்கும் பெண்களுக்கும் உரியது.*

*ஆவியில் எளிமையுள்ள, பாவத்திற்காய் துக்கிக்கிற, சாந்தகுணமுள்ள, நீதியின் மீது பசிதாகம் கொண்ட, இரக்கமுள்ள, இருதயத்தில் சுத்தமுள்ள, சமாதானம் பண்ணுகிற மற்றும் துன்பப்படுத்தப்படுகிற நபர்கள் இயல்பாகவே நல்ல நபர்களாய் இருப்பார்கள்.*

*அதாவது, நம்முடைய அன்றாட வாழ்க்கையில் நம்மிடம் நேரடியாய் பங்குபெறும் ஒருவரை நேடியாய் பார்ப்பதை விட்டுவிட்டு, அவரை கறை படிந்த கண்ணாடி ஜன்னல் வழியாகவோ, கற்சிலை வாயிலாகவோ அல்லது மெழுகு பொம்மையாகவோ பார்ப்பது போன்றது. தேவன் மெழுகு பொம்மைகளோடு இடைபடுவதில்லை. அவர் பொய்களோடு இடைபடுவதில்லை.*

*இங்ஙனம் இயேசு ஒரு விசுவாசியின் சித்திரத்தை வரைகிறார்.*

*தேவனை வெறுக்கிற, தேவனை நிராகரிக்கிற, சத்துருவினால் கட்டுப்படுத்தப்பட்ட ஒரு சமுதாயத்தினால் நாம் உபத்திரவத்தை சந்திக்கிறோம். இது ஏதோ ஒரு சில நபர்கள் மட்டும் அடைகிற ஆசீர்வாதமன்று. இது தேவனுடைய பிள்ளைகளுக்கு மட்டுமே கொடுக்கப்படுகிற ஆசீர்வாதம்.*

*நாம் மறுரூபமாக்கப்பட்டு, இவ்வகையான நபர்களாய் இருப்பதினால், நாம் உலகத்தோடு ஒத்துபோக முடியாமல், உபத்திரவத்தையும் வேதனையையும் வியாகுலத்தையும் சந்திக்க நேரிடுகிறது.*

*முதலாவது ஆவியில் எளிமை. அது நம்மிலிருக்கும் முரட்டாட்டத்திற்கு முடிவு ஏற்படுத்தி, ராஜாவுக்கு நம்மை கீழ்ப்படியும்படி செய்கிறது. ஆவியில் எளிமை என்பது நம்மிலிருக்கும் வெறுமையை உணரச்செய்து, ராஜாவிடத்தில் பணிந்து தன் மேல் இரக்கமாயிருக்கும்பொருட்டு கெஞ்சும்படி செய்கிறது. துயரம் என்பது நம்முடைய பாவங்களுக்காய் நம்மை துக்கிக்கும்படி செய்கிறது. நம்மை நாம் சரியாய் புரிந்துகொள்ளும்போது நமக்கு சாந்தகுணம் உண்டாகிறது. அந்த வாஞ்சையே நீதியின் மீதான ஒரு பசி தாகத்தை நமக்கு ஏற்படுத்துகிறது. மற்றவர்களுக்கு இரக்கத்துடன் சேவை செய்ய நம்மை தயார் செய்கிறது. இருயத்தின் சுத்தம் என்பது தேவனை சரியாகவும் முறையாகவும் அறிந்துகொள்ள உதவுகிறது. நம்முடைய இருதயத்தை ஆளக்கூடிய சமாதானம் என்பது மற்றவர்களுக்கு சமாதானம் செய்கிறவர்களாய் நம்மை மாற்றுகிறது. இவைகள் அனைத்தும் இரட்சிப்பு என்னும் பாதை வழியாய் நம்மை வந்தடைகிறது. இந்த குணாதிசயங்கள் அனைத்தும் மனநிறைவையும், மகிழ்ச்சியையும், ஆசீர்வாதத்தையும் நமக்கு அருளுவதோடு, சுற்றியிருக்கும் அனைத்திற்கும் முரணான ஒன்றாய் அமைகிறது.*

*சமாதானம் பண்ணுகிறவர்கள் உபத்திரவப்படுத்தப்படுவார்கள். அதுவே சமாதானம் பண்ணுகிறவர்களுக்கு சம்பவிக்கும். நாம் சமாதானத்தின் சுவிசேஷத்தைப்*

*பிரசங்கிக்கும்படிக்கு அழைப்பு பெற்றிருக்கிறோம். அதின் படி வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம். ஏதோ ஒரு வகையில் நாம் உபத்திரவத்தை சந்திக்க நேரிடும்.*

*உபத்திரவம்:*

*வச. 10, நீதியின் நிமித்தம் துன்பப்படுகிறவர்களுக்கே மகிழ்ச்சி சொந்தமாகிறது. பரலோக இராஜ்யம் அவர்களுடையது.*

***வச.** 11, அதை தனிப்பயனாக்குகிறது. நீங்கள் நித்திக்கப்படும்போது பாக்கியவான்களாயிருப்பீர்கள். நாங்கள் யாரையோ குறித்துப் பேசவில்லை. உங்களைக் குறித்து பேசுகிறோம். உங்களை உபத்திரவப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்கள்.*

***வச.** 12, மேலும் விளக்கப்பட்டுள்ளது.*

*இது ஒரு தனி மலைப்பிரசங்கம். 10ஆம் வசனத்தில் முடிகிறது. "பரலோக இராஜ்யம் அவர்களுடையது."*

*அதாவது, யாரெல்லாம் கிறிஸ்துவினிமித்தம் உபத்திரவப்படுகிறார்களோ, கிறிஸ்துவினிமித்தம் அவமானப்படுகிறார்களோ, யாருக்கு விரோதமாய் பலவித தீமையான காரியங்கள் பொய்யாய் சொல்லப்படுகிறதோ, அவைகளே பரலோக இராஜ்யத்தின் பிரதிநிதிகளுக்கான அடையாளம்.*

*இராஜ்யத்தின் புத்திரர்கள் பிசாசின் தன்மைகளோடு முரண்படுகிறார்கள்.*

1. ***யார்***
2. ***எப்படி***
3. ***ஏன்***
4. ***எப்போது***

## *1. யார்?*

*இந்த மலைப்பிரசங்க போதனை யாரை உள்ளடக்கியுள்ளது?*

***வச. 10, நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.***

*இந்த போதனை 3-9 வசனங்களில் குறிப்பிடப்பட்ட எல்லோரையும் குறிப்பிடுகிறது.*

*ஆவியில் எளிமையுள்ளவர்கள், துயரப்படுகிறவர்கள், சாந்தகுணமுள்ளவர்கள், நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள், இரக்கமுள்ளவர்கள், இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள், சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள். அதாவது, விசுவாசிகள், தேவனுக்கு சொந்தமானவர்கள், தேவனை சார்ந்திருக்கிறவர்கள் என்று சொல்லலாம்.*

*இந்த நாட்களில் வாழக்கூடிய அனைவருக்கும் உபத்திரவம் உண்டு.*

*2 தீமோத்தேயு 3:12,* ***அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்.***

*இந்த துன்மார்க்கமான உலகத்தில் மலைப்பிரசங்க போதனையின் படி வாழுகிற பாக்கியவான்களாகிய நீங்கள், ஏதோ ஒரு வகையில் உபத்திரவத்தை நிச்சயமாய் சந்திக்க நேரிடும்.*

*கிறிஸ்துவின் நிந்தையை நாமும் ஏதோ ஒரு விகிதத்தில் பகிர்ந்துகொள்கிறோம். அவருடைய நாமத்தின் நிமித்தம் நாம் துன்பப்படுகிறோம். நாம் இந்த உலகத்தில் பக்தியோடு வாழும்போது அவருடைய உபத்திரவத்தில் பங்கேற்கிறோம்.*

*நாம் பிசாசின் மாம்ச தந்திரங்களுக்கு பகையாளர்களாய் மாறாத பட்சத்தில் அவனுக்கு எதிர்த்து நிற்க முடியாது.*

*நீங்கள் உங்களுடைய வாழ்க்கையில் உபத்திரவம், நிந்தை, புறக்கணிப்பு, எதிர்ப்பு மற்றும் அவமானம் ஆகியவற்றை சந்திக்கவில்லையென்றால், நீங்கள் கிறிஸ்தவராயிருப்பதே சாத்தியமில்லை.*

*அப்படியில்லையென்றால் ஒருவேளை நீங்கள் சத்தியத்தை மறைத்து, உலகத்தோடு ஒத்து வாழ்கிற கீழ்ப்படியாத கிறிஸ்தவராயிருப்பீர்கள்.*

*நீங்கள் கிறிஸ்துவைப் போல் இருந்து, அவரைப்போல் ஜீவித்து, சத்தியத்தைப் போதிக்கிறவர்களாயிருந்தால், இயேசு பூமியில் வாழ்ந்த நாட்களில் சத்தியத்தைப் போதித்ததினால் என்னென்ன விளைவுகளை சந்தித்தாரோ, அதை நீங்களும் சந்திக்க நேரிடும்.*

*அவர்கள் உங்களை சிலுவையில் அறையாமலிருக்கலாம். ஆனால் உங்களுக்கு பகைமையும் விரோதமும் வலுக்கும்.*

**வெளிப்படுத்தின விசேஷம்** *6:9-11,*

**வெளிப்படுத்தின விசேஷம்** *13:4-8,*

*கிறிஸ்துவை மகிமைப்படுத்தி, சுவிசேஷத்தை பிரசங்கித்து, சத்தியத்தை பறைசாற்றுகிறவர்களுக்கு கடைசி நாட்களில் உபத்திரவம் உண்டாகும்.*

*நீதிமான்களுக்கு எப்போதும் உபத்திரவம் உண்டு. அவர்கள் எப்போதும் உபத்திரவத்தைச் சந்திப்பர். அவர்கள் தங்களுடைய நல்ல சுபாவங்களுக்காகவும் பக்திவைராக்கியத்திற்காகவும் துன்பப்படுவர்.*

*நாம் ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் வரையிலும் அதற்கான சாட்சியைப் பார்க்கமுடியும். அவைகளெல்லாம் ஆபேலிலிருந்தே துவங்கியது.*

*ஆபேல் நீதிமானாயிருந்தார். தேவன் செய்யச் சொன்னதையே ஆபேல் செய்தார். ஆகையினால் அவர் காயீனினால் கொலைசெய்யப்பட்டார். ஆனால் காயீனும் பக்தியுள்ள மனிதனாக தேவ சமுகத்திற்கு காணிக்கைகளைக் கொண்டுவருகிறான். ஆனால் அந்த காணிக்கை தேவ சமூகத்தில் அங்கீகரிக்கப்படவில்லை. அவன் மெய்யான பக்தியாளனாகிய தன் சகோதரனை வெறுத்து அவனை கொலை செய்தான்.*

*எகிப்தில் இருந்த மோசே தேவ ஜனத்தோடு சேர்ந்து பாடுகளை சந்தித்தார்.*

***எபிரெயர் 11:24-26, விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, 25. அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்பதைப்பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டு, 26. இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான்.***

*எல்லா காலகட்டங்களிலும் இதுவே தான் நிகழ்ந்தது.*

*உபத்திரவம் என்பது பலவழிகளில் மெய்யான சீஷத்துவத்திற்கான அங்கீகாரம்.*

***பிலிப்பியர் 1:29-30, ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்குமாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது. 30. நீங்கள் என்னிடத்திலே கண்டதும் எனக்கு உண்டென்று இப்பொழுது கேள்விப்படுகிறதுமான போராட்டமே உங்களுக்கும் உண்டு.***

*நீங்கள் கிறிஸ்தவுக்கு உண்மையாய் வாழும்போது ஏதோ சில விதங்களில் உபத்திரவத்தை சந்திக்க நேரிடும்.*

***1 தெசலோனிக்கேயர் 3:3-4, இப்படிப்பட்ட உபத்திரவங்களைச் சகிக்க நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோமென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களே. 4. நமக்கு உபத்திரவம் வருமென்று நாங்கள் உங்களிடத்திலிருந்தபோது, உங்களுக்கு முன்னறிவித்தோம்; அப்படியே வந்து நேரிட்டதென்றும் அறிந்திருக்கிறீர்கள்.***

*உபத்திரவம் எதிர்ப்பார்க்கப்பட்டது.*

*புதிய ஏற்பாட்டின் அனைத்து அப்போஸ்தலர்களும், சகிப்புத்தன்மை அதிகமுள்ள தேசங்களிலும் கூட சிலுவை என்பது பகை, விரோதம், மற்றும் பொய்சாட்சி மற்றும் உபத்திரவத்தின் அடையாளமாயிருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்வர்.*

*உபத்திரவமில்லாத ஒரு பாதையில் விசுவாசி கடந்துபோகிறார் என்றால், அவர் தன் முழங்காலில் நின்று ஆவிக்குரிய புரிதலை அடையவேண்டியிருக்கிறது என்பதை அப்போஸ்தலர்கள் வலியுறுத்தியிருப்பார்கள்.*

*தேவனுடைய இராஜ்யத்திற்கு கீழ்ப்படிந்து, கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கிறவர்கள், தங்களைச் சுற்றி கிரியை செய்யும் சாத்தானின் சூழ்ச்சிக்கு விரோதமாய் எதிர்த்து போராடி, ஒருவிதமான பகைக்கு பங்காளிகளாக மாறவேண்டியிருக்கும்.*

- *இந்த தருணங்களில் நாம் சுவிசேஷத்தின் கடினமான காரியங்களை அகற்ற முயற்சித்தோம்.*
- *சுவிசேஷத்தை பாதிப்பில்லாத வகையில் பிரசங்கிக்க முயற்சித்தோம்.*
- *மனந்திரும்பாத ஜனங்கள் எதை விரும்புகிறார்களோ அதை அறிந்து, அவர்களுக்கு பிடிக்காத காரியங்களை சுவிசேஷத்திலிருந்து அகற்றி அவர்களுக்கு ஏற்ற வகையில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தோம்.*
- *நாம் சுவிசேஷத்தின் மெய்யான தாக்கத்தை அகற்றிவிட்டோம்.*

*நாம் விடுதலையாக்கக்கூடிய சத்தியத்தை உள்ளபடி பிரசங்கிக்காமல், அதிலிருக்கும் மெய்யான சாரத்தை இழக்கப்பண்ணக்கூடிய வகையில் அதை போதிக்க முற்பட்டோம்.*

*நீங்கள் உபத்திரவத்திலிருந்து தப்பித்துக்கொள்ள எண்ணினால் அதை நீங்கள் அவ்வாறு செய்யலாம். உலகத்தோடு ஒத்துப்போகலாம். அதை நிராகரிப்பதற்கு பதிலாக, அவற்றை ஏற்றுக்கொள்ளலாம் அல்லது அதை பொருட்படுத்தாமல் விட்டிருக்கலாம். உலகத்தின் ஒழுக்க வரையறைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதின்படி வாழ தீர்மானித்திருக்கலாம். ஜனங்களுக்கு அவர்களின் பாவத்தை வெளிப்படுத்தாமல் இருக்கலாம்.*

*கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாலாமல் தொலைந்துபோனவர்களாக இருக்கிற அவர்கள் சர்வ வல்ல தேவனுடைய நித்திய ஆக்கினைக்கு பாத்திரவான்களாய் மாறியிருக்கிறார்கள் என்னும் சத்தியத்தை அவர்களிடத்தில் பகிரங்கமாய் அறிவிக்காமல் இருக்கலாம். நரகத்தைக் குறித்து அவர்களுக்கு அறிவிக்காமல் இருக்கலாம்.*

*கிறிஸ்துவே ஒரே வழி என்பதை போதிப்பதில்லை. சில மார்க்க சடங்காச்சாரங்களினாலோ, சுய நீதியினாலோ, புண்ணியங்களினாலோ இரட்சிப்பை நாம் அடைய முடியாது, கிறிஸ்துவே இரட்சிப்புக்கு ஒரே வழி என்பதை நாம் போதிக்க தவறியிருக்கலாம்.*

*உலகத்தின் காரியங்களிலிருந்து உங்களை வேறுபிரித்துக்கொள்ள வேண்டாம். அதோடு ஒத்துப்போக பழகவேண்டும், அதின் வேடிக்கைகளை ரசிக்கலாம், பொழுதுபோக்குகளை அனுபவிக்கலாம், அது தேவனை தூஷிக்கும்போது சிரிக்கலாம், மொத்தத்தில் தேவனுடைய நாமம் கனவீனப்படுவதை அனுமதிக்கலாம்.*

*கிறிஸ்துவுக்காய் வைராக்கியமாய் நிற்பதற்கு கூச்சப்பட்டு, உபத்திரவத்திலிருந்து நீங்கள் தப்பித்துக்கொள்ளலாம். ஆனால் இது மிகவும் அபாயகரமான பாதை.*

***லூக்கா 9:26, என்னைக்குறித்தும் என் வார்த்தைகளைக்குறித்தும் எவன் வெட்கப்படுகிறானோ, அவனைக்குறித்து மனுஷகுமாரனும் தம்முடைய மகிமையோடும் பிதாவின் மகிமையோடும் பரிசுத்த தூதர்களின் மகிமையோடும் வரும்போது வெட்கப்படுவார்.***

*நீங்கள் கிறிஸ்துவைக் குறித்த மட்டுமல்லாது, பரிசுத்த வேதாகமத்தில் இடம்பெற்றுள்ள அவருடைய போதனைகளையும் குறித்து வெட்கப்படுகிறவர்களாயிருந்தால், கிறிஸ்துவும் உங்களைக் குறித்து வெட்கப்படுவார்.*

*தேவன் உங்களை தன்னுடையவராய் அங்கீகரிக்கமாட்டார். நீங்கள் இரட்சிக்கப்படாதவர்களாயிருப்பீர்கள் அல்லது கீழ்ப்படியாமையில் தேவனுக்கு தூரமானவர்களாயிருப்பீர்கள்.*

*மறுபுறம், ஒருகனம் பாருங்கள்!*

***1 பேதுரு 1:3-5, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; 4. அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார். 5. கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக்கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்திரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது.***

*ஆகையால் நமக்கு இரட்சிப்பு உண்டு. நமக்கு பரலோகத்தில் ஆயத்தப்படுத்தப்பட்டுள்ள இரட்சிப்புக்குக்காக நாம் பாதுகாக்கப்படுகிறோம்.*

*1 பேதுரு 1:6-7,* ***இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள்; என்றாலும், துன்பப்படவேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள். 7. அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்.***

*நம்முடைய வாழ்க்கையில் ஏற்படுகிற உபத்திரவங்கள், போராட்டங்கள், கடினங்கள், போன்றவைகள் நம்முடைய விசுவாசத்தின் தரத்தை சோதிக்க தேவனால் நமக்கு அனுமதிக்கப்படுகின்றவைகள்.*

*நீங்கள் வாழுகிற வாழ்க்கையானது அக்கினியினால் பரிசோதிக்கப்பட்டு, அது உண்மையா பொய்யா என்பது விளங்கும்.*

*நீங்கள் வெறும் களைகள் நிறைந்த நிலமாயிருப்பீர்கள் என்றால், சத்தியம் என்னும் விதை உங்களுக்குள் வேரூன்றும்போது, களைகள் அதை நெரித்துவிடும். அல்லது, நீங்கள் பாறையான நிலமாயிருந்தால், விதை வேரூன்றும்போது, பாறையினால் தடுக்கப்பட்டு, கனிகொடுக்க முடியாமல் அழிந்துபோகும் அபாயம் நேரிடும். அவைகள் போராட்டங்களுக்கும் பாடுகளுக்கும் உட்படுத்தப்படும். நீங்கள் உதிர்ந்து அழிந்துபோவீர்கள் என்று இயேசு சொல்லுகிறார்.*

*சோதனைக்கு உட்படுத்தப்படுவதின் மூலம் நம்முடைய விசுவாசம் பரிசோதிக்கப்படுகிறது. பேதுருவின் நாட்களில் வாழ்ந்த அநேகர், இன்று கிறிஸ்துவோடு தங்கள் அடையாளத்தைக் காண ஆயத்தமாயிருக்கிறார்கள்.*

*இயேசுவின் நாட்களிலும் அது உண்மையாகவே இருந்தது. அதற்குள் இயேசு சிக்கியிருந்தால் யாரும் அவரைப் பின்பற்றியிருக்க மாட்டார்கள். பேதுருவும் அவரை பின்பற்றியிருந்திருக்கமாட்டார். உங்கள் விசுவாசம் பரிசோதிக்கப்படும் என்று இயேசு சொன்ன வார்த்தைகளையே இங்ஙனம் பேதுருவும் சொல்லுகிறார்.*

*கிறிஸ்துவைப் பின்பற்றுவது என்பது இன்றைய நாட்களில் அவ்வளவு எளிதான காரியமல்ல. கிறிஸ்துவைப் பின்பற்றுதல் என்பது நம்முடைய வேலைகளை பாதிக்கக்கூடும்.*

*வேதாகம நாட்களில் கட்டுமான பணி செய்யும் ஒருவர் விக்கிரக கோயில்களைக் கட்டும் பணியில் ஒருவேளை ஒப்பந்தம்செய்யப்பட்டிருந்திருக்கலாம். விக்கிரக ஆராதனை செய்யும் ஆசாரியர்களுக்கான வஸ்திரங்களை தைக்கும் வேலையை செய்ய வேண்டிய நிர்பந்தம் ஒரு தையல் தொழிலாளிக்கு நேரிட்டிருக்கலாம். கனவீனமாய் கருதப்படும் ஒரு எஜமானுக்கு வேலை செய்ய அவர்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கலாம்.*

*இன்றும் அப்படித்தான்!*

*இன்னும் நாம் ஈடுபட்டிருக்கும் உலக வேலைகளில், நம்முடைய வியாபார யுக்திகளுக்கும் கிறிஸ்துவுக்கு உண்மையாய் வாழ்வதற்கும் இடையே முரண்பாடுகள் தோன்றக்கூடும்.*

*திருச்சபை தலைவர்களுள் ஒருவரான* **டெர்ட்டூலியனுக்கும்** *இந்த மனப்பான்மை இருந்தது. இவர் உண்மையான கிறிஸ்தவனாய் வாழ முற்பட்டார், அனால் அதே வேளையில் அது சாத்தியமற்ற ஒன்று என்றும் கருதினார்.*

*என்ன செய்வது? நான் வாழ்ந்தாகவேண்டுமல்லவா என்று யாரோ ஒருவர் அவரிடத்தில் சொல்ல, அவர் அவர்களிடத்தில், அப்படி வாழ்ந்தேயாகவேண்டுமா? என்று பதிலளித்தாராம்.*

*என்ன வித்தியாசமான பதில்!*

*அவர் என்ன சொல்ல வருகிறார் என்றால், நீங்கள் பஞ்சத்தினால் மரிக்க நேரிடும்போது, நீங்கள் விட்டுக்கொடுக்காமல் இருக்க தீர்மானிக்கலாம். அதாவது, நீங்கள் மரிக்க நேரிட்டாலும் உலகப்பொருட்களுக்காக ஏங்காமல், கிறிஸ்துவுக்கு உண்மையாய் இருப்பதை தெரிவுசெய்யலாம் என்கிறார்.*

*அவர்கள் வேலைசெய்யும் இடங்களில் கிறிஸ்துவுக்கு உண்மையாய் இருப்பது என்பது கடினமான ஒரு காரியமாயிருந்தது. இன்றைய நாட்களைப் போன்று, சமுதாய வாழ்க்கையில் அது மிகவும் கடினமானதாகவும் பாதிக்கக்கூடியதாகவும் அவர்களுக்கு இருந்தது.*

*பண்டைய நாட்களில் ஒருவர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டால் அவர்கள் வாழும் சமுதாய வாழ்க்கையில் பெருமளவில் பாதிப்பு ஏற்படும்.*

*அவர்கள் சினகாஹ்க் என்றழைக்கப்படும் யூதர்களின் ஜெப ஆலயங்களிலிருந்து வெளியேற்றப்படுவர். அது அவர்களை ஊரை விட்டு ஒதுக்கி வைப்பதற்கு சமானம். அவர்கள் அவர்களின் சொந்த குடும்பத்திலிருந்தும் விலக்கி வைக்கப்படுவர்.*

*புறஜாதி மக்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டாலும் அவர்களுக்கும் பாதிப்பு பெருமளவு இருக்கும். பண்டைய காலகட்டங்களில் பெரும்பாலான பண்டிகைகளும் கொண்டாட்டங்களும் விக்கிரக கோயில்களில் நடத்தப்பெறும். அவைகள் மக்கள் ஒன்று கூடும் பொதுவான ஸ்தலங்கள். அங்ஙனமே கொண்டாட்டங்கள் அனைத்தும் நடைபெற்றது.*

*பொய்யான விக்கிரக மார்கங்களில் பலியிடப்படும் ஆட்டுக்கடாவின் நெற்றியில் திலகமிடுவர். அவ்வாறு செய்வதின் மூலம் அந்த ஆட்டின் அனைத்து பாகங்களையும் புசிக்கலாம் என்று அர்த்தம். அந்த பலியிடுப்படும் மிருகத்தின் ஒரு பகுதி ஆசாரியருக்கும் இன்னொரு பகுதி பலியிடும் நபருக்கும் கொடுக்கப்படும். அவர்கள் அந்த பகுதியை தங்களுடைய உறவினர் மற்றும் நண்பர்களிடம் பகிர்ந்து உண்ணுவது வழக்கம். ஆகையால் ஒரு மிருகத்தை பலியிடச் செல்லும்போது, அந்த மிருகத்திற்கு திலகமிட்டு, ஒரு பங்கை ஆசாரியருக்கு கொடுத்துவிட்டு, மீதமிருக்கும் பெரும்பகுதியை மற்றவர்களுடன் பகிர்ந்து பெரிய அளவில் கொண்டாட்டத்தை அனுபவிப்பர்.*

***கிறிஸ்தவர்கள் இந்த வகையான கொண்டாட்டத்திற்கு செல்லலாமா?***

*அவர்கள் சாதாரணமாய் உணவு உண்ணும்போது கூட, அவர்களின் தெய்வத்தை கனப்படுத்தும் விதத்தில், சிறிதளவு மதுபானத்தை படைப்பது வழக்கம். கிறிஸ்தவர்களுக்கு இவ்வகையான கொண்டாட்டத்தில் பங்கேது?*

நீங்கள் கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களாயிருந்தால், இந்த வகையான கொண்டாட்டங்களில் நீங்கள் தனித்திருக்க பழக வேண்டும். இது உங்களுடைய குடும்ப வாழ்க்கையை ஒருவேளை பாதிக்கக்கூடும்.

ஒரு குடும்பத்தில் ஒரு நபர் இரட்சிக்கப்படும்போது அவருக்கான வாசல் அடைக்கப்படுகிறது. இயேசு சொல்லும்போது, குடும்ப உறவுகளைப் பிரிக்கும் பட்டயத்தைப் போட வந்தேன் என்கிறார்.

எனவே விசுவாசிகள் கிறிஸ்துவுக்கு பிரியமானவற்றிற்கும் அவர்களுக்கு பிரியமானவைகளுக்கும் இடையில் நின்று தேர்ந்தெடுக்கவேண்டியிருக்கும். அவர்கள் கிறிஸ்துவை தெரிந்துகொண்டதினால், அவர்களின் குடும்ப உறவுகளிலிருந்து ஒதுக்கப்படவேண்டியிருக்கிறது. அதற்கு பின்பாக ஒரு கிறிஸ்தவனாய் அவர் அனுபவிக்கவேண்டிய பாடுகள் விவரிக்க முடியாதவைகள்.

கிறிஸ்தவர்களின் உபத்திரவ சரித்திரத்தை வாசியுங்கள். அதில் சிங்கக்கெபியில் போடப்பட்டவர்கள், உயிரோடு எரித்து கொலை செய்யப்பட்டவர்கள், இன்னும் பல வழிகளில் கொலைசெய்யப்பட்டவர்கள் என்று எத்தனையோ பேர்கள் உள்ளனர்.

நீரோ மன்னன், கிறிஸ்தவர்களை தன்னுடைய தோட்டத்தில் உயிரோடு கட்டிவைத்து அவர்களை எரித்து, தன்னுடைய தோட்டத்திற்கு ஒளியூட்டினான். கொடூரமான மிருகங்களையும் வேட்டை நாய்களையும் அவர்கள் மீது ஏவி அவர்களின் சரீரத்தை கிழித்து கொலை செய்யும்படி செய்தான்.

அவர்களை உயிரோடு தோலுரித்து, அவர்கள் மீது காய்ச்சிய ஈயத்தை ஊற்றி கொலை செய்தான். அவர்களின் மென்மையான உடல்பாகங்களில் சூடேறக்கூடிய பித்தளை தகடுகளைப் பொருத்தினான். கண்கள் பிடுங்கப்பட்டது.

அவர்களின் கண்களுக்கு முன்பதாகவே அவர்களின் உடல் பாகங்கள் வெட்டியெடுக்கப்பட்டு, வறுக்கப்பட்டது. அவர்களின் கைகளும் கால்களும் எரிக்கப்பட்டு, அவர்கள் வலியில் துடிக்கும்போது, அவர்களின் வேதனையை அதிகரிக்கும் விதத்தில் அதின் மீது குளிர்ந்த நீர் ஊற்றப்பட்டது.

உலகத்தின் பல பகுதிகளில் வசிக்கும் பெரும்பாலான மக்களுக்கு இயேசுவை ஏற்றுக்கொள்வது என்பது இன்றும் கொடூரமான உபத்திரவத்திற்கு வழிவகுக்கும். ரோமர்கள் கிறிஸ்தவர்களுக்கு விரோதமான பொய் குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர். அவர்களை காட்டுமிராண்டித் தனமாய் பாவித்து, அவர்களின் மீது ஒழுக்கக்கேடான அவதூறுகளைப் பரப்பினர். அவர்களின் அன்பின் விருந்தை, இச்சையின் களியாட்டு என்று விமர்சித்தனர்.

அவர்கள் ரோம் தேசத்தை தீயிட்டு எரித்தனர் என்று குற்ற ஞ்சாட்டினர்.

குடும்பங்களை நாசமாக்கினர் என்றும் குற்றஞ்சாட்டினர்.

அரசியல் மற்றும் மார்க்க ரீதியாக முரட்டாட்டம் செய்தனர் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டனர்.

ரோமப் பேரரசர், மக்களின் பார்வையில் கடவுளாய், கனம்பெற்றவராய், தெய்வீக கனத்திற்கு பாத்திரராய் கருதப்பட்டார். அவருடைய தெய்வீகத்தைக் கனப்படுத்தும் விதத்தில் அவருக்கு கோயில்களும் கட்டப்பட்டது. இந்த மூடநம்பிக்கை செய்கைகள் மெல்லமாய் துவங்கினாலும், பின் நாட்களில் பேரரசரை வழிபடும் செய்கை அதிகரித்தது.

*பேரரசரை வழிபடும் இந்த செய்கை மார்க்கங்கள் அனைத்தையும் ஒருங்கிணைக்கும் முயற்சியாய் கடைபிடிக்கப்பட்டது. அது கட்டாயமாக்கப்பட்டது. ஆண்டிற்கு ஒரு முறை ஒவ்வொருவரும் கடந்து சென்று, ரோமப் பேரரசரான ராயனுக்கு துபங்காட்டி, ''ராயனே தேவன்'' என்று மக்கள் அறிக்கையிடுவதற்கு கட்டாயப்படுத்தப்பட்டனர்.*

*ராயனுக்கு துபங்காட்டி ''ராயனே தேவன்'' என்று எவனொருவன் சொல்லுகிறானோ, அவனுக்கு ''லிபெல்லஸ்'' என்ற அரசாங்க சான்றிதழ் கொடுக்கப்பட்டது. அவன் செல்லுமிடமெங்கும் அந்த சான்றிதழைக் கொண்டு சென்று, தான் பேரரசரை கடவுளாக ஏற்றுக்கொண்டவன் என்று அறிவித்துக்கொள்ளலாம்.*

*கிறிஸ்தவர்கள் அதை செய்ய மறுத்துவிட்டனர். அவர்கள் கிறிஸ்துவை தெரிந்துகொண்டனர். அவர்கள் உலகத்தோடு ஒப்புரவாக விரும்பவில்லை.*

*அதினால் அவர்கள் அதிருப்தியாளர்களாய், கலகக்காரர்களாய், தேசத் துரோகிகளாய், பேரரசரின் ஒற்றுமைக்கு அச்சுறுத்தல்களாய், ராயனுக்கு எதிர்ப்பாளர்களாய் கருதப்பட்டனர்.*

*அவர்கள் சித்திரவதை செய்யப்பட்டனர்.*

*ஆகையால் இயேசு இந்த மலைப்பிரசங்கத்தில் சொல்லும் இந்த காரியம் நம்மை ஆச்சரிப்படுத்த வேண்டாம். அவருடைய இராஜ்யத்தின் புத்திரர்களுக்கு உபத்திரம் உண்டு என்கிறார்.*

## *2. எப்படி.*

*இந்த விரோதம் எப்படி வெளிப்படுத்தப்படுகிறது?*

*அவர்கள் உபத்திரவப்படுவார்கள். அதற்கு பயன்படுத்தப்பட்ட கிரேக்கப்பதம், ''டியாகோ.'' அதற்கு தொடர்ந்து செல்லுதல், துரத்துதல், உபத்திரவப்படுத்துதல், துன்புறுத்துதல் மற்றும் தீமை செய்தல் என்று பொருள்.*

***கி.பி. 100லிருந்து 300** வரை கிறிஸ்தவர்கள் இடத்தை விட்டு இடம் துரத்தப்பட்டனர், மிருகங்களைப் போன்று வேட்டையாடப்பட்டனர். மேலே குறிப்பிட்டுள்ளதுபோல இரக்கமற்ற கொடூரமான வழிகளில் யூதர்கள் வேட்டையாடப்பட்டனர். நீ விலைக்கிரயம் செலுத்தியாக வேண்டும் என்று தேவன் சொல்லுகிறார்! நீங்கள் கிறிஸ்தவர்களாகப்போகிறீர்கள் என்றால், இதை நீங்கள் அறிந்து வைத்திருப்பது அவசியம்.*

*இங்கே ஒரு சிந்தை தொடர்புகொள்ளப்பட்டுள்ளது. உபத்திரவப்படுகிறவர்கள் பாக்கியவான்கள் என்பது உபத்திரவப்படும் நிலையைக் காட்டிலும் மேலான ஒரு சத்தியத்தை வெளிப்படுத்துகிறது. இது உபத்திரவப்படுவதற்கான அனுமதியை கொடுக்கிறது. தங்களை உபத்திரவத்திற்கு உட்படுத்திக்கொள்ள விழைகிறவர்கள் பாக்கியவான்கள் என்று மொழி உரைக்கிறது. அதாவது, அவர்கள் மன விருப்பத்தோடே உபத்திரவத்தை சகிப்பவர்கள் என்று கூறப்படுகிறது. அவர்கள் அதை விட்டு ஓட நினைப்பவர்கள் அல்ல; மாறாக, அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள்.*

*தொடர்ச்சியான உபத்திரவத்திற்கு தங்களை உட்படுத்திக்கொள்ளுகிறவர்கள் பாக்கியவான்கள்.*

*உபத்திரவப்பட விருப்பம் தெரிவிப்பதே இங்ஙனம் முக்கியமானது.*

*விருப்பமுடையவர்கள் பாக்கியவான்கள் என்று நாம் சொல்லக்கூடும். உபத்திரவம் எப்போதும் தீவிரமாகவே இருக்கப்போவதில்லை. உபத்திரவத்தை விருப்பத்தோடு சகிக்க முன்வருபவர்களுக்கு உபத்திரவம் ஒன்றுபோல இருக்கப்போவதில்லை. அது வரும்போது வரும். நாம் உபத்திரப்படும்போது பாடுகளை சகிப்போம். நாம் உபத்திரவப்படுவோமாகில், நாம் அவரோடு ஆளுகையும் செய்வோம்.*

*இந்த உபத்திரவம் பல்வேறு பரிமாணங்களைக் கொண்டுள்ளது.*

***வச. 11, என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்.***

*அதாவது, உங்கள் முகத்திற்கு முன்பாக உங்களை சந்தித்து, உங்களை நிந்திப்பார்கள் என்று சொல்லப்பட்டுள்ளது.*

*கடினமான மற்றும் தீமையான அவதூறுகளை உங்களின் முகத்திற்கு முன்பாக சொல்லுவார்கள் என்று அர்த்தம்.*

*அதுமாத்திரமல்ல, அனைத்து விதமான பொய்யான குற்றச்சாட்டுகளையும் உங்கள் மீது சுமத்துவார்கள்.*

*உங்கள் முகத்துக்கு முன்பாக, தீமையான பொய்யான குற்றச்சாட்டுகளை சுமத்துவதோடல்லாமல், உங்களுக்கு பின்பாகவும் போய் உங்களைக் குறித்து தவறான குற்றச்சாட்டுகளையும், விமர்சனங்களையும் பொய்களையும் சொல்லுவார்கள்.*

*கிறிஸ்தவர்களாகிய நாம் இந்த வகையான அனுபவங்களை சந்தித்தாக வேண்டியுள்ளது.*

***1 கொரிந்தியர் 4:9-13, எங்களுக்குத் தோன்றுகிறபடி தேவன் அப்போஸ்தலர்களாகிய எங்களை மரணத்துக்குக் குறிக்கப்பட்டவர்கள்போலக் கடைசியானவர்களாய்க் காணப்படப்பண்ணினார்; நாங்கள் உலகத்துக்கும் தூதருக்கும் மனுஷருக்கும் வேடிக்கையானோம். 10. நாங்கள் கிறிஸ்துவினிமித்தம் பைத்தியக்காரர், நீங்கள் கிறிஸ்துவில் புத்திசாலிகள்; நாங்கள் பலவீனர், நீங்கள் பலவான்கள்; நீங்கள் கனவான்கள், நாங்கள் கனவீனர். 11. இந்நேரம்வரைக்கும் பசியுள்ளவர்களும், தாகமுள்ளவர்களும், நிர்வாணிகளும், குட்டுண்டவர்களும், தங்க இடமில்லாதவர்களுமாயிருக்கிறோம். 12. எங்கள் கைகளினாலே வேலைசெய்து, பாடுபடுகிறோம்; வையப்பட்டு, ஆசீர்வதிக்கிறோம்; துன்பப்பட்டு, சகிக்கிறோம். 13. தூஷிக்கப்பட்டு, வேண்டிக்கொள்ளுகிறோம்; இந்நாள்வரைக்கும் உலகத்தின் குப்பையைப்போலவும், எல்லாரும் துடைத்துப்போடுகிற அழுக்கைப்போலவுமானோம்.***

*நாம் குறிப்பிடப்பட்டுள்ள அந்த 144000 பேரைப்போன்று முத்திரையிடப்பட்டவர்களாய் தெய்வீகப் பாதுகாப்பிற்கு பாத்திரவான்களாய் இருக்கலாம், ஆனால் அது அப்படியில்லை. வரிசையில் நம்முடைய பெயர் கீழே இடம்பெற்றுள்ளது. நாம் மரணத்திற்கு பாத்திரவான்கள். நாம் இந்த உலகத்தில் தூதர்களுக்கும் மனிதர்களுக்கும் காட்சிபொருளாக்கப்பட்டுள்ளோம்.*

*அப்போஸ்தலர்களே மகிமைப்படுத்தப்படுவார்கள் என்று நீங்கள் எண்ணியிருக்கலாம். உலகம் அவர்களை அதிகம் வெறுத்ததினால் அவர்களும் குப்பைகளாகவே கருதப்பட்டனர்.*

*மனிதன் உபத்திரவப்பட்டு, அதிலிருந்து விடுதலையாகி, அனைத்து விதமான குற்றச்சாட்டுகளையும் தன் மீது சுமந்து தன் நீதியின் நிமித்தம் யார் துன்பப்பட எண்ணுவர்?*

*ஆனால் அத்தகைய வாழ்க்கை மனிதர்களின் தெய்வ பக்தியை கண்டிக்கிறது. அவர்களின் வெறுப்பைத் தூண்டுகிறது. அது ஆதியாகமம் 3:15ன் பரிசுத்த வித்தின் மீதான சர்ப்பத்தின் பகையேயாகும்.*

***யார் உபத்திரவப்படப்போகிறார்கள்?***

*இராஜ்யத்தின் புத்திரர்கள்.*

***அவர்கள் எவ்வாறு உபத்திரவப்படப்போகிறார்கள்?***

*முகத்திற்கு நேராக அவதூறு பேசுப்படுவது, முதுகுக்கு பின்பாக உங்களைக் குறித்து இழிவாய் பேசுவது போன்ற அனைத்து வகையான உபத்திரவங்களையும் சந்திப்பர்.*

## *3. ஏன்?*

*அது ஏன் நமக்கு சம்பவிக்கிறது?*

*அதைக் குறித்து நாம் ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டிருக்கிறோம். ஆனாலும் யோவான் 15ஐ திருப்பிக்கொள்ளுங்கள்.*

***யோவான் 15:18-19, உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள். 19. நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது.***

*அவர்களின் வரையறைக்கு நீங்கள் பொருந்தாதவர்களாதலால் அவர்கள் உங்களை பகைக்கின்றனர். நீங்கள் அதை உங்களுடைய பயபக்தியினிமித்தமும் நீதியினிமித்தமும் மேற்கொள்ளுகிறீர்கள். அதை நீங்கள் கடிந்துகொண்டு, பாவத்தின் விளைவை உலகம் அனுபவிக்கும்படி செய்கிறீர்கள்.*

***யோவான் 15:20-21, ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள்; அவர்கள் என் வசனத்தைக் கைக்கொண்டதுண்டானால், உங்கள் வசனத்தையும் கைக்கொள்ளுவார்கள். 21. அவர்கள் என்னை அனுப்பினவரை அறியாதபடியினால் என் நாமத்தினிமித்தமே இவைகளையெல்லாம் உங்களுக்குச் செய்வார்கள்.***

*அவர்கள் தேவனை அறியார்கள், கிறிஸ்துவையும் அறியார்கள், அவர்கள் உங்களையும் விரும்பமாட்டார்கள். ஏனெனில், நீங்கள் அவர்களை முகத்துக்கு நேராய் கடிந்துகொள்ளுகிறீர்கள். உங்கள் நீதியினிமித்தம் அவர்களின் பாவங்களைக் கண்டிக்கிறீர்கள்.*

***யோவான் 15:22-24, நான் வந்து அவர்களிடத்தில் பேசாதிருந்தேனானால் அவர்களுக்குப் பாவமிராது; இப்பொழுதோ தங்கள் பாவத்தைக்குறித்துப் போக்குச்சொல்ல அவர்களுக்கு இடமில்லை. 23. என்னைப் பகைக்கிறவன் என் பிதாவையும் பகைக்கிறான். 24. வேறொருவரும் செய்யாத கிரியைகளை நான் அவர்களுக்குள்ளே செய்யாதிருந்தேனானால், அவர்களுக்குப் பாவமிராது; இப்பொழுது அவர்கள் என்னையும் என் பிதாவையும் கண்டும் பகைத்துமிருக்கிறார்கள்.***

*நான் அவர்களின் பாவம் எது என்பதை அவர்களுக்கு தெளிவாய் சொல்லியிருக்கிறேன் என்று இயேசு சொல்லுகிறார். அவர்கள் அதை சரி செய்தாக வேண்டும். அவர்கள் தங்களின் பாவ வாழ்க்கையை சரி செய்வதை விட்டுவிட்டு என்னைப் பகைக்கிறார்கள்.*

*உங்களுடைய நீதியானது அநீதியின் மத்தியில் வாழும் என்றால், உங்களுடைய பரிசுத்த பக்திவைராக்கியத்தினிமித்தம் நீங்கள் பாவத்தைக் கடிந்துகொண்டீர்களென்றால், பாவத்தோடு ஒத்துப்போகாத உங்களுடைய சுபாவம், நீங்கள் அந்தப் பாவத்தை வெளிப்படையாகவும், அன்பாகவும் எதிர்கொள்ளுவீர்கள் என்றால், யாராவது ஒருவர் அதினிமித்தம் மனந்திரும்பி இரட்சிக்கப்படலாம் அல்லது உங்கள் கடிந்துகொள்ளுதலின் நிமித்தம் உங்களைப் பகைக்கலாம்.*

***யோவான் 15:25, முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள் என்று அவர்களுடைய வேதத்தில் எழுதியிருக்கிற வாக்கியம் நிறைவேறும்படிக்கு இப்படியாயிற்று.***

*அவர்களுக்கு ஒரு காரணம் இருந்தது, ஆனால் அது நியாயமான காரணம் அல்ல.*

***யோவான் 16:1-4, நீங்கள் இடறலடையாதபடிக்கு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். 2. அவர்கள் உங்களை ஜெபஆலயங்களுக்குப் புறம்பாக்குவார்கள்; மேலும் உங்களைக் கொலைசெய்கிறவன் தான் தேவனுக்குத் தொண்டுசெய்கிறவனென்று நினைக்குங் காலம் வரும். 3. அவர்கள் பிதாவையும் என்னையும் அறியாதபடியினால் இவைகளை உங்களுக்குச் செய்வார்கள். 4. அந்தக் காலம் வரும்போது நான் இவைகளை உங்களுக்குச் சொன்னேனென்று நீங்கள் நினைக்கும்படி இவைகளை உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன்; நான் உங்களுடனேகூட இருந்தபடியினால் ஆரம்பத்திலே இவைகளை உங்களுக்குச் சொல்லவில்லை.***

*அது நடந்தேறிவிட்டது.*

*தன்னுடைய போதனையில் நிலைத்து நின்ற அந்திரேயா சிலுவையில் அறையப்பட்டார். அவருக்கு நிகழ்த்தப்பட்ட மரணத்தில் அவர் பொறுமையாய் சாகவேண்டும் என்பதற்காக, அவரை சிலுவையில் கயிறுகளினாலும் கட்டினர் என்றும் சரித்திரம் பதிவுசெய்திருக்கிறது. அவர் அதே நிலையில் மரிக்க நேரிட்டது.*

*ஒன்பது மாதங்கள் சிறைவாசத்தை அனுபவித்த பேதுரு தலைகீழாக சிலுவையில் அறைப்பட்டதாய் பாரம்பரியம் கூறுகிறது.*

*பவுல் அப்போஸ்தலர், நீரோ மன்னனால் சிரச்சேதம் செய்யப்பட்டார்.*

*யாக்கோபு, மத்தேயு, மத்தியா, பத்தொலொமேயு, தோமா ஆகியோர் இரத்தசாட்சியாய் மரித்திருக்கின்றனர். யோவானைத் தவிர்த்து, மற்ற அனைத்து அப்போஸ்தலர்களும் இரத்தசாட்சியாகவே மரித்திருக்கின்றனர் என்று நம்பப்படுகின்றது.*

***அரிஸ்டைட்ஸ் த ஜஸ்ட்*** *என்று அதற்கு பின்பாக வந்த கிறிஸ்தவர், ஏதென்ஸ் பட்டணத்தை விட்டு வெளியேற்றப்பட்டார். அவர் தேசத்திலிருந்து*

*துரத்தப்படவேண்டும் என்று வாக்களித்த ஒருவரிடம் போய், ஏன் அவரை வெளியேற்றம் செய்வதற்கு நீங்கள் வாக்களித்தீர்கள் என்று கேட்டதற்கு, "அவர் எப்போதும் "த ஜஸ்ட்" (நீதிமான்) என்று தன்னுடைய பெயரை சொல்லுக்கொள்வதை நான் விரும்பவில்லை" என்று பதிலளித்தாராம். "தங்களை நீதிமானாய் அடையாளப்படுத்துபவர்களை நான் விரும்புவதில்லை" என்றும் கூறினாராம்.*

***வச. 11, "என்னிமித்தம்"***

*இயேசுவின் நாட்களில் ரோம ஆதிக்கத்தை வீழ்ச்சியடைய செய்ய போராடிய, யூதர்களின் ஒரு பிரிவான, சில கலிலேய வாழ் செலோத்தியர்கள் மிகவும் கொடிய உபத்திரவங்களையும், பாடுகளையும் அனுபவித்து வெறுத்து கொலைசெய்யப்பட்டனர். அவர்கள் ஏரோதுக்கும் ரோமுக்கும் விரோதமாய் கலகம் செய்தனர் என்று குற்றஞ்சுமத்தப்பட்டு கொலைசெய்யப்பட்டனர். நாம் இங்கு கலந்தாலோசிப்பது இந்த வகையான உபத்திரவத்தை அல்ல.*

*இங்கு நாம், தங்கள் நீதியினிமித்தமும், என்னிமித்தமும், கிறிஸ்துவினிமித்தமும், உபத்திரவத்தை சந்தித்துக்கொண்டிருப்பவர்களைக் குறித்து பேசிக்கொண்டிருக்கிறோம்.*

*மற்றவர்களை துன்பப்படுத்துவதும் சரியானது அல்ல.*

*தவறு செய்யாதவர்களை கொடுமைப்படுத்தி துன்புறுத்துவதைக் குறித்து இங்கு நாம் பேசவில்லை.*

*வேறு எந்த விதமான உபத்திரவங்களைக் குறித்தும் இங்கு நாம் விவாதிக்கவில்லை. அது வேறு விஷயம்.*

*1 பேதுரு 4:14-16,* ***நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள்; ஏனென்றால் தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள்மேல் தங்கியிருக்கிறார்; அவர்களாலே தூஷிக்கப்படுகிறார்; உங்களாலே மகிமைப்படுகிறார். 15. ஆதலால் உங்களில் ஒருவனும் கொலைபாதகனாயாவது, திருடனாயாவது, பொல்லாங்கு செய்தவனாயாவது, அந்நிய காரியங்களில் தலையிட்டுக்கொண்டவனாயாவது பாடுபடுகிறவனாயிருக்கக்கூடாது. 16. ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்.***

*பெரிய வாக்குத்தத்தம்:*

*நீங்கள் உபத்திரவப்படும்போது, தேவனுடைய ஆவியானவர் உங்களுக்குள் வாசம் செய்கிறார்.*

*அனைத்து வகையான காரணங்களுக்காக உபத்திரவப்படுகிறவர்களைக் குறித்து நாம் பேசவில்லை. கிறிஸ்தவர்களாயிருந்தாலும், நம்மை காயப்படுத்தும் அனைத்து வகையான உபத்திரவமான பாதைகளைக் குறித்து நாம் இங்கு பேசவில்லை. உங்களுடைய மீறுதலினிமித்தமும், தவறின் நிமித்தமும் நீங்கள் சந்திக்கும் உபத்திரவத்தைக் குறித்து நாம் பேசவில்லை.*

*நீதியினிமித்தம் படும் பாடுகளைக் குறித்து நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். நாம் கிறிஸ்துவுக்குள் யார் என்னும் நம்முடைய அங்கீகாரத்தின் அடிப்படையிலும், கிறிஸ்துவின் நாமத்தை நாம் பயன்படுத்துவதினாலும், உண்மையான ஜீவனுள்ள*

*தேவனை நாம் விசுவாசிப்பதினாலும் ஏற்படும் உபத்திரவத்தைக் குறித்து நாம் பேசுகிறோம்.*

*நாம் கிறிஸ்துவில் யார் என்னும் நம்முடைய அடையாளத்தின் நிமித்தம், அவருடைய நீதியை நாம் சுமந்திருப்பதினாலும், மற்றவர்களுக்கு அவருடைய நீதியின் அளவை சுட்டிக்காண்பித்து, அதின் வரையறைகளுக்கு உட்படாதவர்களை பாவி என்றும் நியாயத்தீர்ப்புக்கு பாத்திரவான்கள் என்று அடையாளப்படுத்தி, அவர்களுடைய இரட்சிப்பின் தேவையை சுட்டிக்காட்டுவதால், நாம் அவர்களின் வெறுப்புக்கு ஆளாக்கப்படுகிறோம்.*

***மத்தேயு 5:44-45, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களைச் ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள். 45. இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர் மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்.***

*கிறிஸ்துவை அறியாதவர்கள் அவரைப் பற்றி அலட்சியமாக இருக்கிறார்கள் என்னும் மாயையான நம்பிக்கையில் இருக்காதீர்கள். சுவிசேஷத்தை நிராகரித்து, கிறிஸ்துவை வெறுக்கிறவர்களுக்கு அவரிடத்தில் பங்கில்லை.*

*ஆகையால் கிறிஸ்துவின் நீதியை பிரதிபலிக்கும் வாழ்க்கை நான் வாழுவேனாகில், கிறிஸ்துவை எனக்குள் பிரதிபலிக்கும் வாழ்க்கை வாழுவேனாகில், நாம் வாழுகிற, பேசுகிற எல்லாவற்றிலும் என்னுடைய இரட்சகரை பிரதிபலிக்கும் வாழ்க்கையை நான் வாழுவேனாகில், சுவிசேஷத்தின் சத்தியத்தை தெளிவாய் போதித்து, பாவத்தைக் கண்டித்து உணர்த்தி, மக்களை மனந்திரும்புதலுக்கு நேராய் வரவழைத்து, அவர்களுக்கு மன்னிப்பின் நற்செய்தியை பிரசங்கிக்கும்போது, அங்கே பகை ஏற்படுவதற்கு நிச்சயமாய் வாய்ப்பு உண்டு.*

***யார் உபத்திரவப்படப்போகிறார்கள்?***

*இராஜ்யத்தின் புத்திரர்கள்.*

***அவர்கள் எவ்வாறு உபத்திரவப்படப்போகிறார்கள்?***

*அவர்களுக்கு விரோதமாய் அவதூறு பேசப்படுவதின் மூலமும், அவர்களின் முகத்துக்கு முன்பாக அவர்களை இழிவுபடுத்துவதின் மூலமும் உபத்திரவத்தை சந்திப்பர்.*

***ஏன்?***

*ஏனென்றால், அவர்களிடத்தில் ஜனங்கள் விரும்பாத செய்தி இருக்கிறது. அது பாவம், நியாயத்தீர்ப்பு, நீதி மற்றும் இரட்சிப்பைக் குறித்த செய்தி.*

## *4. எப்போது?*

*எப்போது?*

*எப்போது வேண்டுமானாலும்.*

***ஹோடன்,** என்ற வார்த்தைக்கு எப்போது வேண்டுமானாலும் என்று அர்த்தம்.*

*எப்போதெல்லாம் மனிதர்கள் உங்களை நித்திக்கிறார்களோ, எப்போதெல்லாம் அது சம்பவிக்கிறதோ, எங்கு வேண்டுமானாலும் அது சம்பவிக்கலாம். நான் சொன்னதுபோல இடைவிடாமல் அது இருக்கப்போவதில்லை, முடிவில்லாததாகவும் அது இருக்கப்போவதில்லை. அது சம்பவித்தே தீரும். அது எல்லா வேலைகளிலும் சம்பவிக்கலாம். அதை ஏற்றுக்கொள்ளவும், ஆசீர்வாதத்தின் பாதையில் அவற்றை சந்திக்கவும் நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.*

*இந்த சூழ்நிலையில் நாம் எப்படி சந்தோஷமாயிருக்க முடியும்?*

*12ஆம் வசனத்தில் சொல்லப்பட்டுள்ளதுபோல், நாம் எவ்வாறு சந்தோஷப்பட்டு களிகூர முடியும்?*

*அது எவ்வகையில் சாத்தியமாகும்? இந்த கடினமான உபத்திரவப் பாதையில் சந்தோஷத்தை சாட்சியிடுவது எவ்விதத்தில் சாத்தியம்?*

*நீங்கள் கிறிஸ்துவை எவ்வளவு பலமாய் பறைசாற்றுகிறீர்களோ, எந்த அளவிற்கு நீங்கள் கிறிஸ்துவில் வேரூன்றியுள்ளீர்களோ, அந்த அளவிற்கு நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களாயிருக்கிறீர்கள். நீங்கள் எந்த அளவிற்கு அன்போடும் வெளிப்படையாகவும் பேசுகிறீர்களோ, அந்த அளவிற்கு பகையை நீங்கள் சம்பாதிக்க நேரிடும். அதே அளவிற்கு நீங்கள் பரலோகத்தில் வெகுமதியையும் பெற முடியும்.*

*மிஷனரியான வில்லியம்கேரியிடம் யாரோ ஒருவர், "நீங்கள் ஷ_ செய்கிறவர்தானே?" என்று ஏளனமாய் கேட்க, அதற்கு அவர், "இல்லை, நான் ஷ_ செய்கிறவனும் இல்லை, செருப்பு தைக்கிறவன், எனக்கு ஷ_ செய்ய தெரியாது" என்று தாழ்மையாய் பதிலளித்தாராம்.*

*எந்த அடிப்படை கல்வியறிவும் இல்லாதவராய், பிரிட்டிஷ் மிஷனரி சொசைட்டியின் மூலம் மிஷனரியாக இந்தியாவிற்கு வந்து, இந்தியாவின் பதினொரு மொழிகளில் வேதாகமத்தை மொழிபெயர்த்தவர்.*

*அவர் செருப்பு தைக்கும்போதே, கிரேக்கம், எபிரெயம், லத்தீன் போன்ற மொழிகளில் புலமை பெற்றவர். அவருடைய மனைவிக்கு திருமணமாகி பிள்ளை பெற்ற பின்னரும் கூட எழுத படிக்க தெரியாது.*

*மிகவும் எளிமையான துவக்கம்.*

*அவர் இந்தியாவிற்கு சென்று, அங்கிருந்த கொல்கத்தா என்னும் கடினமான பகுதியில் அயராது உழைத்தார். 1700களில் கொல்கத்தாவை நாம் கற்பனை செய்தும் பார்க்கமுடியாது. அவர் அங்கிருந்து பதினொரு மொழிகளில் வேதத்தை மொழிபெயர்த்தார்.*

*அவரை மிஷனரியாய் அனுப்பிய இங்கிலாந்து தேசம் அவருடைய வாழ்வாதாரத்திற்கு மிகவும் சிறிய தொகையையே அனுப்பியது. அவர் தான் மொழிபெயர்த்த வேதாகம மொழிபெயர்ப்புகளை அச்சிட்டு மக்களுடைய கரத்தில் கொண்டு சேர்ப்பதற்கு அவருக்கு பணம் தேவைப்பட்டது.*

*அவர் தவறான மொழிகளில் தரமில்லாத மொழிபெயர்ப்புகளை செய்து, செல்வத்தை திரட்ட பிரயாசப்படுகிறார் என்று அவரைக் குறித்து இங்கிலாந்தில் சிலர் குற்றஞ்சாட்டினர். ஆனால் அவர் அதைக் குறித்து கவலைப்படாமல் கொல்கத்தாவில் சுவிசேஷத்தைப் பிரகடனப்படுத்த முழுமூச்சுடன் பிரயாசப்பட்டார்.*

***வச. 12, சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே.***

***சந்தோஷப்படுவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.***

*பரலோகத்தில் உன் பலன் மிகுதியாயிருக்கும்.*

*அந்த பலனானது, எனக்கு என்ன நேரிட்டாலும், கிறிஸ்துவின் நாம மகிமைக்காகவும் கனத்திற்காகவும் சுவிசேஷத்திற்காகவும் நான் பிரயாசப்படுவேன் என்னும் என்னுடைய அடையாளத்திலிருந்து பிறக்கிறது. பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்.*

***வச. 12, சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே.***

*நீங்கள் கிறிஸ்துவுக்காய் பாடனுபவிக்கும்போது, உங்களுக்கென்று ஒரு நல்ல துணையிருக்கிறது என்பதை மறக்க வேண்டாம்.*

*உங்கள் சிந்தையில் என்ன வருகிறது?*

*எபிரெயர் 11.*

*மோசே கிறிஸ்துவின் நிந்தையை அனுபவிக்கத் தயாராக இருந்தாரல்லவா?*

*நீங்கள் மோசேயின் வரிசையில் நிற்கிறீர்கள்.*

*நீங்கள் அனைத்து பழைய மற்றும் புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் வரிசையில் நிற்கிறீர்கள்.*